TCAV **TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA**

**விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா**

# Messenger தூதுவன்

**கிறிஸ்துமஸ் வெளியீடு | December 2018**



*With Best Compliments from*

# PERPETUA MONEY TRANSFER

**WorldWide**

**We Guarantee the best rate for**

## SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE



- **SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY**
- **RESPONSIBLE CUSTOMER SERVICE**
- **CONVENIENT WORLDWIDE LOCATIONS**
- **EASY, QUICK INTERNET MONEY TRANSFER**

**Send Money to any Bank in Sri Lanka**

**Direct Deposit**

Perpetua Money Transfer
BSB No: 033186
Acc No: 401283
Westpac Bank Australia

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478
Email: pmoneytransfer@ymail.com



# அருட்தந்தையின் ஆசி !!!

என் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரித்தான மெல்பன்வாழ் தமிழ் கத்தோலிக்கமக்களுக்கு 2018 ஆம் ஆண்டுக்கான கிறிஸ்து பிறப்பு விழாவின் வாழ்த்துக்களை கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். நான் 9 ஆண்டு காலமாக உங்களோடு ஒருவனாக இருந்து இந்த கால கிறிஸ்து பிறப்பு விழாக்களை கொண்டாட இறைவன் தந்த சந்தர்ப்பத்துக்காக இறைவனுக்கும், உங்களுக்கும், நன்றி கூறுகிறேன்.

பிலிப்பியனுக்கு எழுதிய திருமுலத்தில் கூறுவதுபோல, இயேசு கடவுளுக்கென்று இருந்த நிலையை பிடித்துக் கொண்டு இருக்க வேண்டியவராகக் கருதவில்லை, அவர் தம்மை தாழ்த்தி அடிமையின் கோலம் பூண்டார். இந்த கிறிஸ்து பிறப்பு விழாவில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது எம்மை மற்றவர்களுக்காக விட்டுக்கொடுப்பதாகும். நாம், எமது என்ற நிலை சுயநலத்தில் வாழாது, மற்றவர்களுக்காக வாழ முயற்சி செய்வோம். வரவிருக்கும் புதிய ஆண்டை மகிழ்வுடன் வரவேற்போம்.

கிறிஸ்து பிறப்பு வெளியீட்டினை பார்வையிடும் உங்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மடல் சிறப்பாக அமைய தங்களின் படைப்புகளைத் தந்து ஊக்கமளித்த அனைத்து எழுத்தாளப் பெருமக்களுக்கு எம் இதயம் கனிந்த நன்றிகள்

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்

என்றும் அன்புடன்,
அருட்தந்தை.
**அந்தோணி ஞானப்பிரகாசம்**

இரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட ஒரு கை நீட்டி உதவி செய்...

# Christmas Message

தமிழ் மொழியால் ஒன்றுபட்ட கிறிஸ்தவ மக்களே!

2018ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவில் விக்டோரிய தமிழ் கத்தோலிக்க சங்க தலைவராக உங்களை வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த புலம்பெயர் நாட்டில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் நாம் அனைவரும் நமது ஆன்மீக செயற்பாடுகளை தொடர்ந்து கடைபிடிக்கவும் அதை நம் தாய்மொழியில் செயற்படுத்தி திருப்தி அடையவும் விக்டோரிய தமிழ் கத்தோலிக்க சங்கமும் அதன் ஆன்மகுருவும் தன்னலமற்ற பணிகளை செய்துவருவதை பாராட்டுவது இந்த கிறிஸ்மஸ் பண்டிகையில் மிகப்பொருத்தமானதாகும்.

ஒப்பிட்டு வாழ்வது மனித இயல்பு, அதன் அடிப்படையில், இன்று உலகெங்கும் இயற்கை அனர்த்தங்கள், அரசியல் ஸ்திரமின்மை, சமூக சமய அடக்குமுறைகள், வன்முறைகள் இவற்றின் மத்தியில் பல்வேறு மக்கள் அவலப்படும் நிலையில், நாம் இந்த அழகான அமைதியான ஆஸ்திரேலியா நாட்டில் ஒப்பீட்டளவில் நல்ல வாழ்வு வாழ இறைவன் எமக்களித்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாமும் நல்வாழ்வு வாழ்ந்து மற்றவர்களுக்கும் எம்மாலான உதவிகளை புரிந்து, பாலகன் யேசு எவ்வாறு தன்னையே எமக்காக அர்ப்பணிக்க இவ்வுலகிற்கு வந்த இந்த நத்தார் பண்டிகையின் அர்த்தத்தை புரிந்தவர்களாக, இந்த நத்தார் பண்டிகையை ஏதோ ஒரு வகையில் கொடுப்பதன்மூலம் களிப்புறுவோமாக.

May I wish all of you a

*Merry Christmas and a Happy New Year*



பிரித்திவிராஜ் வேதநாயகம்
President
Tamil Catholic Association of Victoria

உனக்கு தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.




## It's Christmas Time !!!

## (Cookies Make Great Gifts from Children to family, Friends and Loved Ones)



### Christmas Cream Cheese Cookies

**Ingredients:**
**3 oz cream cheese, 1 cup butter, 1 egg yolk,**
**1 cup sugar, 1 teaspoon vanilla,**
**2 1/2 cups all-purpose flour;**
**optional food coloring and sprinkles**

Pre-heat oven for 325
Step 1: In a large bowl cream the butter, sugar and cream cheese
Step 2: Add egg yolk and vanilla
Step 3: Add flour a little at a time and mix until well blended
Step 4: Knead dough into a ball
Step 5: Optional: You can separate dough and add a couple drops of food coloring to get colorful Christmas Cookies
Step 6: Roll out dough and use cookie cutters to make shapes, add dough to a cookie press, or drop spoonfuls of dough on cookie sheet. **Use un-greased cookie sheet.** Add sugar sprinkles before baking. Bake for 10-15 minutes. Cookies will remain light in color. They will be a little darker on the bottom.

# CHOCOLATE REINDEER COOKIES



Pre-heat oven 375
Ingredients: 1 cup butter, 1 cup sugar,
3 cups flour, 1/3 cup unsweetened coca powder,
1 teaspoon vanilla, 1 teaspoon baking soda,
3 eggs, 1/2 teaspoon salt, small pretzel
shape pretzels (for antlers about 70),
M&M's, red gum drops

Step 1: In a large bowl beat butter and sugar until creamy
Step 2: Add in coca powder,baking soda, and salt.
Step 3: Beat in egg and vanilla.
Step 4: Add in flour a little at a time. Keep mixing until well blended.
Step 5: On a light floured surface roll dough into circles or reindeer face shape (circular on top, slightly pointed on bottom)
Step 6: Add one pretzel to the top side of each circle, M&M's as eyes and red gum drops as the nose.
Step 7: Bake for 9 minutes or until edges are firm.



# Long Long Ago



Winds thro'the olive trees
Softly did blow,
Round little Bethlehem
Long, long ago.

Sheep on the hillside lay
Whiter than snow;
Shepherds were watching them,
Long, long ago.

Then from the happy sky,
Angels bent low,
Singin their songs of joy,
Long, long ago.

For in a manger bed,
Cradled we know,
Christ came to Bethlehem,
Long, long ago.



உன் மேல் அன்பு கொண்டவர்களை நேசி, உன் மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி

## A BEAUTIFUL STAR SHINING BRIGHT.

Her time was almost at hand,
but taxes had to be paid in all the land.
They traveled for miles and miles, knowing
that soon they would have their little child.
Her days were accomplished in the little
town of Bethlehem, but not a room could be found.
In a barn with cattle and sheep would be where they
would find their sleep.
Baby Jesus was born that night,
with a beautiful star shining bright.
Because God sent His Son from above,
the world would now know how to love.

## Australian Charity Watchdog : The Australian Charities and Not - for - Profits Commission (ACNC).

**THE KMART WISHING TREE/SALVATION ARMY** : The Kmart Wishing Tree Appeal helps everyone.

Visit the The Kmart Wishing Tree/Salvation Army website to donate.

**THE PYJAMA FOUNDATION**: At The Pyjama Foundation, they provide children in foster care the opportunity to change the direction of their lives with learning, life skills and confidence.

Visit the The Pyjama Foundation website to volunteer, donate or refer a child.

**THE SMITH FAMILY**: Your gift of a new toy or books will bring a smile to a disadvantaged child's face this Christmas. Sadly, thousands of Aussie kids will go without receiving a gift this holiday season simply because their families can't afford it. This year, with your help, The Smith Family aim to deliver over 43,500 new toys and 29,000 new books to children inneed around Australia.

Visit the The Smith Family website to donate.

# CHRISTMAS
# WORD SEARCH PUZZLE

*Good Luck Kids*

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | U | Y | R | A | U | K | H | H | R | S | Z | O | I | X | C | T |
| B | I | W | L | X | P | F | Z | O | N | N | W | G | J | Y | L | Q |
| E | Z | D | A | E | P | B | B | L | C | E | Q | Y | K | I | I | Q |
| M | M | T | U | S | P | D | Y | I | U | K | H | E | C | N | S | B |
| M | D | C | P | F | G | W | T | D | F | L | U | U | G | N | Y | A |
| Y | C | I | M | U | N | M | Z | A | R | I | I | Q | N | G | D | U |
| F | K | U | Y | E | D | O | D | Y | C | I | H | G | A | G | J | B |
| C | S | I | Z | O | V | A | F | N | M | A | R | K | T | A | V | L |
| J | E | L | E | V | V | L | H | K | L | Z | T | O | I | L | A | E |
| E | G | P | O | I | N | S | E | T | T | I | A | T | V | J | J | S |
| S | G | P | W | O | M | Z | W | X | L | L | A | O | I | A | Y | W |
| U | N | K | I | W | G | A | A | U | A | S | N | E | T | R | K | Y |
| S | O | J | I | F | B | W | E | A | J | T | R | A | Y | V | Q | B |
| O | G | B | F | W | K | I | R | J | M | R | X | X | I | I | C | L |
| N | C | R | E | I | N | D | E | E | R | Y | K | Y | A | J | Q | J |
| L | H | C | I | V | B | D | M | Q | G | I | N | S | N | Y | A | Q |
| M | B | G | G | Y | U | C | H | R | I | S | T | M | A | S | X | J |

## WORD LIST

**CHRISTMAS, REINDEER, POINSETTIA, BAUBLES, NATIVITY, JESUS, HOLIDAY, EGGNOG**



# "Dat Baby Jesus - He Makes me Laugh"

"I have set the Lord always before me. Because He is at my right hand, I will not be shaken. Therefore my heart is glad and my tongue rejoices; my body also will rest secure." Psalm 16:8, 9.

Brennan Manning, in his book, The Relentless Tenderness of Jesus, tells of an experience he had at an airport. It was just before Christmas and he was in the Chicago airport waiting to get a flight to Texas for a week-end retreat. But because of a severe storm, he and thousands of others were not going anywhere. The flights were all delayed. Public address systems were blaring, people were at the ticket counter demanding a projected departure time, children were crying, some people were just sitting and staring.

Then he noticed a middle-aged black woman cradling a child in her arms and laughing. Manning asked her,

"Would you mind telling me why you're so happy?"

"Sho," she said. "Christmas is coming and dat baby Jesus

He make me laugh."

According to the Psalm 16, verses 8 and 9, focusing on Jesus at all times is the key to a happy and joyful heart. How about you?

During the Christmas season, our already busy life becomes busier.

Are you 'setting the Lord before you' today?

Do you want to have a merry Christmas?

Bring Jesus into all your activities.

Talk to Him all day long. He will make you laugh! Father, you fill us with joy in your presence. Give us the grace to remember to enjoy your presence. We want to laugh, Lord. Amen

# SYNERGY'S CURRY COURT

**Srin Lankan Indian Take away and Dine-in**
**We cater for all occasions**
**at most competitive price**

Shop 33, 314-360 Childs Road, Millpark,
At Stables Shopping Centre.
Ph: 03 9437 8000

Trading Hours :
Tue-Sun : 11.30 a.m. - 9 p.m.
Monday Closed






# SYNERGY SPICE

a fully stocked up your one stop
Indian Srilankan Grocery Store
Direct Importers & Wholesalers

**open 7 days**

**Ph : 03 9404 4488**

at Millpark
Shop 45, 314-360 Childs Road, Millpark
at Stables Shopping Centre

at Delahey
Shop 1/350 Taylors Road,
Delahey, Ph. (03) 9364 5844



# பதிப்பாசிரியரின் பதிவு...

ஒரு கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சிலர், தங்கள் பேராசிரியரைச் சந்திக்கச் சென்றனர். அவர்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த சிறிது நேரத்தில், அவ்விளையோர், தங்கள் வாழ்வில் அடைந்து வரும் மன அழுத்தங்களைப்பற்றி புலம்ப ஆரம்பித்தனர்.

பேராசிரியர் வீட்டுக்குள் சென்று, அவர்களுக்கு **"Coffee"** தயாரித்து, ஒரு பாத்திரத்தில் எடுத்துவந்தார். கூடவே, ஒரு தட்டில் சில கோப்பைகளையும் கொணர்ந்தார். அவர் கொண்டுவந்த கோப்பைகளில், ஒரு சில, பார்ப்பதற்கு அழகாக, விலையுயர்ந்ததாகத் தெரிந்தன. வேறு சில கோப்பைகள், மிக எளிமையானதாக இருந்தன. இளையோர், ஆளுக்கு ஒரு கோப்பையை எடுத்துக்கொண்டதும், பேரராசிரியர், கோப்பைகளில் **"Coffee"**யை ஊற்றியவண்ணம் பேச ஆரம்பித்தார்.

உங்கள் கரங்களில் இருக்கும் கோப்பைகளைப் பாருங்கள். அழகாக விலையுயர்ந்ததாகத் தெரிந்த கோப்பைகளை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள். சாதாரண கோப்பைகளை யாரும் தொடவில்லை. மிகவும் நல்லவற்றையே பெறவேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறீர்கள். இதில் தவறு ஏதுமில்லை. ஆனால், அங்குதான் உங்கள் பிரச்சனைகள் ஆரம்பமாகின்றன என்பதை நீங்கள் உணரவேண்டும்.



நீங்கள் வைத்திருக்கும் கோப்பை, அதில் ஊற்றப்படும் **"Coffee"**யின் சுவையை எவ்விதத்திலும் மாற்றப்போவதில்லை. சில வேளைகளில், விலையுயர்ந்த கோப்பைகள், உள்ளே இருப்பனவற்றை மறைக்கவும் செய்கின்றன.

நீங்கள் அனைவரும் பருக விரும்பியது, **"Coffee"** யை, கோப்பையை அல்ல. இருப்பினும், உங்களை அறியாமல், உங்கள் கவனம் கோப்பையின் மீது திரும்பியது. விலையுயர்ந்த கோப்பைகளைத் தேடிச் சென்றீர்கள். உங்கள் நண்பர்கள் எடுத்த கோப்பையையும் ஓரக்கண்ணால் பார்த்தீர்கள்.



இங்கு நடந்ததை, வாழ்வுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். வாழ்வு என்பது **"Coffee"**. உங்கள் வேலை, நீங்கள் வாங்கும் சம்பளம், சமுதாயத்தில் உங்கள் அந்தஸ்து, ஆகியவை, கோப்பைகள். வாழ்வு என்ற **"Coffee"** யைத் தாங்கி நிற்கும் கோப்பைகள். கோப்பைகளில் அதிக கவனம் செலுத்தி, **"Coffee"** யைச் சுவைக்கத் தவறுகிறோம். கடவுள் தருவது **"Coffee"** கோப்பை அல்ல என்று பேராசிரியர் கூறி முடித்தபோது, இளையோர் ஆழ்ந்த அமைதியில் மூழ்கினர்.

எனவே, பிறக்கப்போகும் புத்தாண்டில் மிகச் சிறந்தவற்றை எதிர் பார்க்காமல், பெற்றதை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்தி மகிழ்வுடன் வாழ என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்...

பதிப்பாசிரியர்
**கமிலஸ்**

# அடுத்த வாய்ப்பு எப்பொழுதுமே .....

**தொடர்ந்து முயற்சி செய்...**
**கிடைத்தால் வெற்றி...**
**இல்லாவிட்டால் அனுபவம்....**

இது பெரியோர் சொல்லும் அறிவுரை. ஒரு தேர்வை நன்றாக எழுதவில்லை என கவலைப்படும் பிள்ளைகளிடம், பெற்றோர், இந்த முறை போனால் பரவயில்லை, அடுத்த தேர்வை நன்றாக எழுது என ஊக்கப்படுத்துவார்கள். தேர்வு மட்டுமல்ல, எந்த ஒரு போட்டிக்கும் செல்பவர்கள் தோற்றுவிட்டால், அதற்கென்ன பரவாயில்லை, அடுத்த போட்டியில் பார்த்துக்கொள்ளலாம் என்று தட்டிக்கொடுத்து தேற்றுவார்கள்.

இரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து தொடரின் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் பிரேசில் அணியை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தி பெல்ஜியம் அணி அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது. அந்நேரத்தில் பிரேசில் அணியினரும், இரசிகர்களும் கடும் சோகத்தில் மூழ்கினர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த இருபதாயிரத்திற்கு மேற்பட்ட திருப்பயணிகளுக்கு மூவேளை செப உரையாற்றிய பின் இறுதியில், தோல்வியுற்ற பிரேசில் அணியினரை ஊக்கப்படுத்தும் வகையில், "இங்கு பிரேசில் கொடிகளை பார்க்கிறேன், துணிவோடிருங்கள், எப்பொழுதுமே அடுத்த வாய்ப்பு உள்ளது". என்றார். தோல்விகளும் வெற்றிகளும் நிரந்தரமல்ல. இந்த முறை இல்லாவிட்டால், அடுத்த முறை என்று தொடர்ந்து முயற்சி செய்பவர்கள் வெற்றியின் சிகரத்தை எட்டுகிறார்கள் என்பதே நிதர்சனம்.

## தாய்லாந்தில் குகைக்குள் சிக்கிய சிறார் மீட்புப்பணி

தாய்லாந்தில், 16 நாட்கள் அடிநிலக் குகைக்குள் சிக்கித் தவித்த சிறுவர்கள் நல்ல உடல்நலத்துடன் பத்திரமாக மீட்கப்பட்டதற்க்கு காரணம், மீட்புப்பணியைக் கைவிடாமல், தொடர்ந்து முயற்சி செய்த பணியாளர்களின் தியாகங்களும் கடவுளின் துணையுமே.

கடவுள் துணையுடன் முயற்சி செய்பவர்களே வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி பெற முடியும். வாழ்வில் உயர்வதற்கு பணம் தேவையில்லை, மாறாக, அறிவு, நேர்மறை எண்ணங்கள், இருக்கின்ற திறமையை அறிந்து பயன்படுத்துதல், நல்ல பழக்கவழக்கங்கள், ஒரு குறிக்கோள், அளவற்ற ஊக்கம், மன உறுதி, விடாமுயற்சி, உறுதியான சிந்தனைகள் போன்ற நெறிமுறைகளைக் கையாண்டலே போதும். மனம் எதை ஆழமாக நம்புகிறதோ, அதைத்தான் மனிதர் சாதிக்கின்றனர் என்று உளவியல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். எனவே, வருகின்ற வாய்ப்புகளை நழுவவிடாமல், தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் உண்டு. நாம் எவ்வளவு காலம் வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல. எப்படி வாழ்கின்றோம் என்பதுதானே முக்கியம். தோல்வி அடைந்தவர்களை கூட இந்த உலகம் மன்னித்துவிடும். ஆனால் வாய்ப்புக் கிடைத்தும் அதைப் பயன்படுத்தாமல் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பவர்களை யாரும் மன்னிக்க மாட்டார்கள், மதிக்கவும் மாட்டார்கள். அன்பர்களே, வெறுங்கை என்பது மூடத்தனம், ஆனால், விரல்கள் பத்துமே மூலதனம்.

வாழ்க்கைப் பந்தயத்தில் வெற்றிபெற ஆற்றல் இருந்தால் மட்டும் போதாது, அந்த ஆற்றலைப் பயன்படுத்துகின்ற ஊக்கமும் இருக்க வேண்டும். கடந்த காலத்தை எண்ணிக் கவலைகொண்டு ஊக்கமின்றி நிகழ்காலத்தைத் தவறவிடுபவர்களை, மூடர்கள் என மகாகவி பாரதி பாடினார். "சென்றதினி மீளாது மூடரே நீர்", சென்றதையே தினம்தினமும் சிந்தை செய்து கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர் என்றார் பாரதி. "ஊக்கமது கைவிடேல்" என்றார் ஔவை பாட்டி. எனவே, ஒருமுறை வாழ்வில் தோல்வியுற்றால், சோர்ந்து விடாமல், எப்பொழுதும் அடுத்த வாய்ப்பு உள்ளது என்பதை நினைத்து உற்சாகத்துடன் செயல்படுவோம். வெறுங்கை என்பது மூடத்தனம், விரல்கள் பத்துமே மூலதனம்.

*அனைத்து உறவுகளுக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்.*

அன்புடன் : **மிருணாளினி கமிலஸ்**

# உண்மையான கிறிஸ்மஸ்

டிசம்பர் மாதம் வந்துவிட்டாலே இத்தனை சீக்கிரம் இந்த வருடம் முடிந்துவிட்டதா என்ற நினைப்பும் கிறிஸ்மஸ் பெருவிழா வருகிறது என்ற நினைப்பும் வருவது இயற்கை. ஆண்டவரின் இரக்கத்தினால் வருடத்தின் கடைசி நாட்களில் நம்மை நடத்தி வருகிற நல்லதேவனுக்கு நன்றி கூறுவோம்.

ஆனால் அநேக மக்களின் உள்ளத்தில் ஒரு பயம் இருக்கிறது. வருடக்கடைசியில் இன்னும் என்னென்ன நமக்கு காத்திருக்கிறதோ என்ற கவலை ஒரு சிலருக்கு. கிறிஸ்மஸ் பெருவிழாவை எப்படி கொண்டாட போகிறோமோ என்று சிலரும் இப்படித்தான் கொண்டாட வேண்டும் என்று சிலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.



இந்த வருடம் முழுமையும் நம்மை காத்த நல்ல கடவுள், இனியும் காக்க வல்லவர் என்பதை முழுமையாக நம்புவோம். இதோ! வருடமே முடியப்போகிறது. நாம் எண்ணிய காரியங்கள் நடக்கவேயில்லையே என்று நமக்கு கவலை இருக்கலாம். நாம் நினைத்த நேரத்தில் நடக்காத விஷயங்களை ஆண்டவர் தாம் குறித்த நேரத்தில் மிகநேர்த்தியாக நம் நன்மைக்காகவே செய்து முடிப்பார் என்று நம்புவோம். அவரை நம்பியிருக்கும் நம்மை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்.

***ஆண்டவருக்காக காத்திருப்போர் ஒருபோதும் வெட்கமடைவதில்லை அவர் முகத்தை நோக்கிப் பார்த்தோர் ஏமாந்து போவதில்லை (ஏசா 49:23 திப 33:5)*** என்பதை விசுவாசிப்போம். அவரது வார்த்தை ஒருபோதும் பொய்த்து போகாது. ஆபிரகாம் நினைத்த நேரத்தில் அவர் விருப்பப்படி குழந்தை கிடைக்கவில்லை. ஆனால் ஆண்டவர் கணித்த நேரத்தில் அவரது ஆசை நிறைவேறியது. உரிய காலம் என்று ஒன்று உண்டு. முப்பத்தியெட்டு வருடம் ஒருவன் பெஸ்தா குளத்தருகே நோயோடு காத்திருக்க வேண்டியதாய் இருந்தது. ஆயினும் அவனுடைய வேளை வந்தபோது இரட்டிப்பான ஆசிர் பெற்றான். உடல் நோயிலிருந்தும், பாவமான வாழ்க்கையிலிருந்தும் விடுதலை பெற்றான்.

ஆகவே அன்பர்களே! நாம் சோர்ந்து போகாது, நம் தேவைகள் நிறைவேற காத்திருப்போம். ஒன்று கூடி ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோமாக. இறுதிநாள் நெருங்கி வருகிறதை காண்கிறோம். எனவே இன்னும் அதிகமாய் ஊக்கமூட்டுவோமாக (எபி. 10:25) ஆகவே, முதலாவது நாம் செய்ய வேண்டியது, சோர்ந்து தளர்ந்து, நம்மிடம் வருகிறவர்களுக்கு நம்பிக்கை இழக்காமல் இருக்க ஊக்கமூட்டுவது நமது கடமை.

இரண்டாவது, ஆண்டவர் செய்கிற ஒவ்வொரு நன்மைகளுக்காவும் அவருக்கு நன்றி செலுத்துவோம். ஒவ்வொரு நாளும் நம்மை காத்து வழிநடத்தி வருகிறாரே அந்த நல்ல கடவுள். அவருக்கு நன்றி. நமக்கு நடக்க முடியாத காரியங்களுக்காவும் கூட நம் நன்மைக்காகவே மௌனமாக இருக்கிறார் என்று நம்பி அவருக்கு நன்றி செலுத்துவோமாக. மூன்றாவதாக, வருடத்தின் இறுதி நாட்களில் இருக்கும் நாம் பாவத்தால் ஏமாற்றப்பட்டு கடின உள்ளத்தினர் ஆகாதவாறு ஒவ்வொரு நாளும் இன்றே என்று எண்ணி ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுவோம். எபி 3:13

ஆகவே, கிறிஸ்மஸ் பெருவிழா கொண்டாட நாம் செய்கிற எல்லா ஏற்பாடுகளை காட்டிலும் கிறிஸ்து இயேசு நம் உள்ளத்தில் பிறக்க அதிக ஆர்வம் காட்டுவோம். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, அவரை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் வரவேற்போம். அதுவே உண்மையான கிறிஸ்மஸ்!

# நுண்ணறிவா? விண்ணறிவா? எது தேவை?

நிறுவனம் தனது தளத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்க ரோபாட்டிக் மென்பொருட்களை பயன்படுத்தி வருகிறது. அவற்றுக்கு சேட்பாட் என்பது பெயர். அதாவது சேட் செய்யும் ரோபாட்கள் என்பதன் சுருக்கம் தான் அது. நாற்பது மொழிகள் அவற்றுக்குள் பதித்து வைக்கப்பட்டுள்ளன, எந்த மொழியை தேர்ந்தெடுத்து உரையாடுகிறோமோ அதற்குத் தக்கபடி அதுவும் அதே மொழியில் பதில் தரும்

ரோபோட்டிக் தொழில்நுட்பம் நாளை மனுக்குலத்துக்கு மாபெரும் அச்சுறுத்தலாய் மாறலாம் என்பதன் ஒரு சின்ன உதாரணம் இது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை வெறும் அறிவியல் புனைக் கதைகளிலும்

ஹாலிவுட் திரைப்படங்களிலும் மட்டுமே வலம் வந்த ரோபோக்கள் இன்று இலட்சக்கணக்கான வீடுகளில் நுழைத்து விட்டன. எல்லா துறைகளிலும் ரோபோக்களின் ஆதிக்கம் அதிகரித்து விட்டது. ரோபோ என்பது கைகால் வைத்த மனித உருவ ரோபோக்கள் மட்டுமல்ல, செயற்கை நுண்ணறிவோடு வலம் வரும் எல்லா மென்பொருட்களும் இந்த வகையறாவில் வந்து விடுகிறது.




தனிமையில் வாடும் இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் நட்பு பாராட்ட கம்பேனியன் ரோபோக்கள் உருவாக்கப்படுகின்றன. இன்றைய Internet of Things, Big Data, augmented reality, Machine Learning, Cloud என எல்லா தொழில்நுட்ப அம்சங்களும் எனும் செயற்கை நுண்ணறிவுக்குள் நுழைந்து விட்டது.

தன்னை விட அறிவு குறைந்த விலங்குகளை எப்படி மனிதன் அடக்கி ஆள்கிறானோ, அப்படி தன்னை விட அறிவு குறைந்த மனிதனை செயற்கை நுண்ணறிவு கருவிகள் அடக்கி ஆள்வது சாத்தியமே. காரணம் இன்றைக்கு கிடைக்கின்ற தகவல்களை மனிதனை விட பல இலட்சம் மடங்கு வேகத்திலும், பல கோடி மடங்கு அதிகமாகவும் பயன்படுத்தும் வாய்ப்பு அந்த இயந்திரங்களுக்கு உண்டு. இயற்கை வளர்ச்சியில் இருக்கும் மனிதனால் அந்த விஷயத்தில் போட்டி போடவே முடியாது. இதை நான் சொல்லவில்லை உலகில் தலை சிறந்த அறிவியலார் ஸ்டீபன் ஹாக்கின்ஸ் சொல்கிறார்.

எல்லாம் பயன் தரும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டு, பயம் தரும் பாதையில் பயணிப்பது தான் கவலைக்குரியது. ஓட்டுநர் இல்லாத கார், செயற்கைக் கை, ஆபத்தான வேலைகள் செய்தல், காலநிலை கணித்தல், விளையாட்டுப் பயிற்சிக்கு உதவுதல், ஆராய்ச்சிப் பணிகள் என செயற்கை நுண்ணறிவின் நோக்கங்கள் நல்லவையாகவே இருக்கின்றன. ஆனால் முடிவுகள் தான் வேறு விதமாய் அமைந்து விடுகின்றன.

கடவுளை நிராகரிக்கும் அறிவியல், கருவிகளை அரவணைக்கிறது. இயந்திரத்தை அரவணைக்கும் நவீனம் இதயங்களை நிராகரிக்கிறது. இந்த செயற்கை நுண்ணறிவின் யுகத்தை தவிர்த்து விட முடியாது. எனில், இந்த செயற்கை நுண்ணறிவு யுகத்தில் கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வலுப்படுத்துவது

சமத்துவம் காப்போம் : செயற்கை நுண்ணறிவு சமூக ஏற்றத்தாழ்வுகளை இன்னும் அதிகரிக்கும். இந்த சூழலில் நாம் சமத்துவம் பேணும் மனம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நமக்குள் இருக்கின்ற பாகுபாடுகளின் வேறுபாடுகளை அவிழ்த்து விட்டு சமத்துவத்தின் சட்டையை மாட்டிக் கொள்ள வேண்டும்.

மனிதம் காப்போம் : இயந்திர சார்பை கழற்றி விட்டு சக மனிதர்களோடான உரையாடல்களை அதிகப்படுத்த வேண்டும். சமூகத்தில் நிராகரிக்கப்பட்ட மனிதர்களோடு நேரம் செலவிடுதலே மனிதம் காப்பதன் முதல் பணி. டிஜிடல் வெளியில் மீட்பு விற்கப்படுவதில்லை. மனிதத்தின் பிடியில் மீட்பு நிராகரிக்கப்படுவதில்லை.

பாதுகாப்போம் : எந்த அளவுக்கு, இறைவனோடும், இயற்கையோடும், மனிதர்களோடும் இணைந்து வாழ்கிறோமோ அந்த அளவுக்கு பாதுகாப்பாய் வாழ்வோம் என்று அர்த்தம். தொழில்நுட்பங்கள் தொட்டுக் கொள்ளும் தூரத்தில் இருப்பதே பாதுகாப்பானது, கட்டிக் கொள்ளும் நெருக்கத்தில் வருவது ஆபத்தானது. தேவைக்கு மட்டுமே அவற்றை தேர்தெடுப்போம், ஆசைக்காய் அல்ல. நமது பாதுகாப்பு செயற்கை நுண்ணறிவோடு அல்ல, இறையெனும் விண்ணறிவோடு இருக்க வேண்டும்.

உறவுகள் காப்போம் : இயந்திர இருப்பை விட அன்பின் அரவணைப்புகள் தானே முக்கியம். உறவுகளை நேசிப்போம். அவர்கள் நம்மை விட்டுப் பிரியும் வரை அவர்களோடு பிரியமாய் இருப்பதே உறவுகளை நேசிப்பதன் வெளிப்பாடு.

உலகில் நிகழும் எந்த மாற்றங்களும் நம்மை அழிவுக்குள் அழைத்துச் செல்லாது. ஆனால் நம் உள்ளுக்குள் நிகழும் மாற்றங்கள் நம்மை அழிவுக்குள்ளும் அழைத்துச் செல்லலாம், வாழ்வுக்குள்ளும் வழிநடத்திச் செல்லலாம், வாழ்வுக்குள்ளும் வழிநடத்திச் செல்லலாம்.

எனவே, உள்ளத்தைக் காப்போம், உள்ளதைக் காப்போம். இறைவனை மட்டும் இதயத்தில் காப்போம்.

அனைத்து உறவுகளுக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புது வருட வாழ்த்துக்கள்....

**அன்புடன் மிருணளினி கமிலஸ்**

# உலகைச்சுற்றி – ஓர் அலசல்...

## நாம் ஒருங்கிணைந்து பேசுகிறோம்

"சிறுவரும், இளையோரும் தயக்கமின்றி உண்மை பேசுவர் என்பதால் அவர்கள் வழியே, இறைவன், வரலாற்றை முன்னோக்கி நடத்திச் சென்றார்" - திருத்தந்தை

இவ்வாண்டு மார்ச் மாதம் உரோம் நகரில் ஒரு முக்கிய சந்திப்பு நிகழ்ந்தது. உலகின் 5 கண்டங்களில் வாழும் இளையோரின் பிரதிநிதிகளாக, 300க்கும் அதிகமான இளையோர், இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர் மற்றும் பிற மதங்களைச் சார்ந்த சில இளையோரும், இச்சந்திப்பில், கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருந்தனர். இச்சந்திப்பில், மாற்றுத்திறன் கொண்ட இளையோரும் கலந்துகொண்டனர். அக்டோபர் 3, இளையோரை மையப்படுத்தி வத்திக்கானில் துவங்கும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு ஒரு தயாரிப்பாக, இச்சந்திப்பு நடைபெற்றது. "நாம் ஒருங்கிணைந்து பேசுகிறோம்" (We talk together) என்ற மையக்கருத்துடன் நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்துகொண்டோரை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காலையில் சந்தித்து வாழ்த்தினார்.

## ஆஸ்திரிய இளையோரின் நிதி திரட்டும் முயற்சி

எத்தியோப்பியா, ஈக்குவதோர், மற்றும் இந்தியாவில் உதவி தேவைப்படுவோரை மையப்படுத்தி, ஆஸ்திரிய இளையோர் நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மிஸ்ஸியோ (Missio) என்ற கத்தோலிக்க பிறரன்பு அமைப்பு, ஒவ்வொர் ஆண்டும் ஆஸ்திரிய இளையோரின் உதவியுடன் நடத்தும் இந்த நிதி திரட்டும் முயற்சியில், உடலுக்குத் தீங்கு விளைவிக்காத மூலப்பொருள்களைக் கொண்டு, சமூக விழிப்புணர்வுடன் தயாரிக்கப்பட்ட இனிப்புகள், மற்றும் பழ இரசம் ஆகியவற்றை விற்பனை செய்வதன் வழியே, இளையோர் திரட்டும் நிதி வறுமைப்பட்ட நாடுகளில் உதவி தேவைப்படுபவர்களுக்காக பயன்படுத்தப்படும் என்று, மிஸ்ஸியோ நிறுவனத்தின் தேசிய இயக்குனர், அருள்பணி கார்ல் வால்னர் அவர்கள் கூறினார்.

கடந்த ஆண்டு, ஆஸ்திரியாவில், இளையோர் மேற்கொண்ட இந்த முயற்சியில், 110 பங்குத்தளங்கள் பங்கேற்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## இலங்கையில் தூய்மையான அரசியல் நிலைக்காக ஓர் ஊர்வலம்

இலங்கையில் இலஞ்சம் முடிவுக்குக் கொணரப்பட வேண்டும் எனவும், தூய்மையான அரசியல் ஆட்சி இடம்பெற வேண்டும் எனவும் அழைப்பு விடுத்து, அந்நாட்டு அருள்பணியாளர்களும் இருபால் துறவியரும், பொதுமக்களுடன் இணைந்து, ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசியல் பிரதிநிதிகளை, கட்சிகள், தங்கள் பக்கமாக விலை கொடுத்து வாங்கும் கலாச்சாரம் வளர்ந்து வருவது குறித்து எதிர்ப்புத் தெரிவித்து, ஊர்வலம் ஒன்றை மேற்கொண்ட இவர்கள், குடியரசு மற்றும் நீதியின் சார்பாக இந்த ஊர்வலம் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தனர்.

அரசியல் பதட்ட நிலைகள் இடம்பெற்றுவரும் இவ்வேளையில் பணத்தாசையையும், அமைச்சர் பதவி ஆசைகளையும் காட்டி, பாராளுமன்ற அங்கத்தினர்களை விலைக்கு வாங்கும் நிலை பற்றி கருத்து வெளியிட்ட, நீதி மற்றும் குடியரசுக்கான மக்கள் இயக்கத்தின் பிரதிநிதிகள், கட்சி மாறுவதற்கு பணம் வழங்கப்படுவது குறித்து புகார்கள் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும் என தெரிவித்தனர்.



## புனித அன்னை தெரேசாவைப் பற்றிய புதிய நூல்

அன்னை தெரேசா கடவுள் நம்பிக்கையற்றவருக்கும் திருமணமானவர்களுக்கும் புனிதர் என்ற தலைப்பில் வெளியாகும் இந்நூலை, பாப்பிறை இல்லத்தில் ஆன்மீக உரைகளை வழங்கிவரும் அருள்பணி ரானியேரோ காந்தலமெஸ்ஸா (Raniero Cantalamessa) அவர்கள் எழுதியுள்ளார்.

1980ம் ஆண்டு முதல், பாப்பிறை இல்லத்தின் மறையுரையாளராகப் பணியாற்றிவரும் அருள்பணி காந்தலமெஸ்ஸா அவர்கள், 2003ம் ஆண்டு, அன்னை தெரேசா அருளாளராக உயர்த்தப்பட்ட நிகழ்வையொட்டி, பாப்பிறை இல்லத்திலும், வத்திக்கானிலும் வாழ்ந்தோருக்கு வழங்கிய ஆன்மீக உரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

அன்னை தெரேசா பிறந்த ஆல்பேனியா நாடு, மத நம்பிக்கையற்ற நாடு என்று அறிவிக்கப்பட்டாலும், கம்யூனிச ஆட்சி அந்நாட்டில் தொடர்ந்த வேளையிலும், அது வீழ்ந்தபின்னரும், அன்னைக்கு தனிப்பட்ட மரியாதை விளங்குவதைக் கருத்தில் கொண்டு, இந்நூலின் தலைப்பு வழங்கப்பட்டது என்று அருள்பணி காந்தலமெஸ்ஸா அவர்கள், குறிப்பிட்டுள்ளார்.

கப்புச்சியன் துறவு சபையைச் சேர்ந்த அருள்பணி காந்தலமெஸ்ஸா அவர்கள் எழுதியுள்ள இந்நூலை, புனித பவுல் பதிப்பகம் வெளியிடுகிறது.

## இளையோர் செபமாலை செபிக்க உதவும் காரித்தாஸ்

எருசலேமில் வாழும் கிறிஸ்தவக் குடும்பங்களின் பொருளாதார நிலைமையை முன்னேற்றவும், இளையோரை செபமாலை செபிப்பதற்குத் தூண்டவுமென, எருசலேம் காரித்தாஸ் அமைப்பு, 15 இலட்சம் செபமாலைகள் தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

செபமாலைகள் தயாரிப்பதன் வழியாக வாழ்க்கைத்தரத்தை மாற்றுதல் என்ற திட்டத்தில், சிறிய ஒலிவ மரத் தொழிற்கூடங்களில் ஏறத்தாழ 250 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது, எருசலேம் காரித்தாஸ்.

இத்திட்டத்தின் வழியாக, மக்களுக்கு பாதுகாப்பான ஒரு வருங்காலத்தை அமைத்துக்கொடுப்பதுடன், அமைதி, அன்பு மற்றும் நீதி நிறைந்த உலகு உருவாக்கப்படுதற்கு, இளையோரைச் செபிக்கத் தூண்டவும் முயற்சித்து வருகிறது. காரித்தாஸ் அமைப்பு.

மத்திய அமெரிக்க நாடாகிய பானாமில், 2019ம் ஆண்டில் நடைபெறும் உலக இளையோர் நிகழ்வில் கலந்துகொள்ளும் இளையோர்க்கு, இந்தச் செபமாலைகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புனித பாத்ரே பியோ

புனித பாத்ரே பியோ அவர்களின் இதயத்தை உள்ளடக்கிய புனிதப் பொருள், பிலிப்பீன்ஸ் நாட்டின் பல்வேறு நகரங்களில் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், இந்தப் புனிதப் பொருளை 50 இலட்சத்திற்கும் அதிகமானோர் வணங்கியுள்ளதாகவும் பிலிப்பீன்ஸ் ஆயர் பேரவையின் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடு, பாரகுவாய், மற்றும் அர்ஜென்டீனா ஆகிய நாடுகளில் பயணம் மேற்கொண்ட புனித பாத்ரே பியோ அவர்களின் இதயம், பிலிப்பீன்ஸ் நாட்டின் மணிலா, சேபு, தவாயோ, லீப்பா ஆகிய நகரங்களில் மக்களின் வணக்கத்தைப் பெற்று வந்துள்ளது.

இப்புனித பொருள் பிலிப்பீன்ஸ் நாட்டைவிட்டு இத்தாலிக்கு புறப்பட்ட வேளையில், இறுதித் திருப்பலியை நிறைவேற்றிய கர்தினால் அவர்கள், புனித பாத்ரே பியோ போன்ற புனிதர்களைக் கண்டு பாராட்டுவது மட்டும் போதாது, அவர்களைப்போல பிறரன்பிலும், பணிவிலும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தன் மறையுரையில் கூறினார்.

கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள பிலிப்பீன்ஸ் நாட்டில், கிறிஸ்தவ விழுமியங்கள் மறக்கப்பட்டுவிட்டதால், ஊழலும், வன்முறைகளும் தினசரி நிகழ்வுகளாக மாறிவிட்டன என்று கர்தினால் அவர்கள் தன் மறையுரையில் எடுத்துரைத்தார்.

ஏனைய நாடுகளில் காணப்பட்ட பக்தியைக் காட்டிலும், பிலிப்பீன்ஸ் நாட்டில் காணப்பட்ட பக்தி, தங்கள் உள்ளங்களைத் தொட்டதாக, இத்திருப்பயணத்தில் உடன் சென்றிருந்த, புனித பாத்ரே பியோ திருத்தலத்தில் தலைவர், அருள்பணி Carlo Laborde அவர்கள் கூறினார்.



# புனிதம் ஒரு சிலருக்கு மட்டும்தானா

"புனிதம் ஒரு சிலருக்கு மட்டும்தானா? இல்லை, நாம் ஒவ்வொருவரும் புனிதராக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நாம் தொட்டுவிடக்கூடிய தூரத்தில்தான் புனிதம் உள்ளது. அதற்குத் தேவையானதெல்லாம் இரண்டே அம்சங்கள், இறைவனின் அருள், மற்றும் நமது நல்ல மனம்"

புனிதத்தைக் குறித்த இந்த எளிமையானச் சொற்கள், வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், 1966ம் ஆண்டு, மார்ச் 16ம் தேதி, புதன்கிழமை, ஒலித்தன. அன்று, அவ்வளாகத்தில் நடைபெற்ற புதன் மறைக்கல்வி உரையில் கலந்துகொள்ள சிறுவர், சிறுமியர் பெருமளவில் வந்திருந்தனர். புனிதம் என்றால் என்ன என்பதை, அவர்களுக்குப் புரியும் வகையில், எளிய சொற்களில் அன்று சொன்னவர், திருத்தந்தை 6ம் பவுல்.

நாம் இறைவனின் கருவிகளேயன்றி வேறெதுவும் இல்லை என்பதைப் புரிந்து, ஏற்றுக்கொள்ளும் அத்தருணம், மிக அழகானது. நாம் எவ்வளவு காலம் வாழவேண்டுமென்று இறைவன் நினைக்கிறாரோ, அவ்வளவு காலம் மட்டுமே நாம் வாழ்கிறோம். நாம் எவ்வளவு செய்யமுடியும் என்று இறைவன் நினைக்கிறாரோ, அவ்வளவு மட்டுமே நம்மால் செய்யமுடியும். உயர் மறைமாவட்டத்தில் பணியாற்றிய வேளையில் கொல்லப்பட்ட பேராயர் ஆஸ்கர் ரொமேரோ அவர்களின் கூற்றாக "**அன்பின் வன்முறை**" (The Violence of Love) என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள சொற்கள் இவை.

"**நாம் தொட்டுவிடக்கூடிய தூரத்தில்தான் புனிதம் உள்ளது**". என்று கூறிய திருத்தந்தை 6ம் பவுல் அவர்களும், "**நாம் இறைவனின் கருவிகள் என்பதைப் புரிந்துகொள்வதே மிக அழகானது**" என்று கூறிய பேராயர் ரொமேரோ அவர்களும், புனிதர்களாக உயர்த்தப்பட்டனர்.

ஒரு திருத்தந்தை, ஒரு பேராயர், இரு மறைமாவட்ட அருள்பணியாளர்கள், இரு அருள் சகோதரிகள் மற்றும் பொதுநிலையினரான ஓர் இளையவர் என்று, இந்த ஆண்டு ஏழு அருளாளர்கள், புனிதர்களாக உயர்த்தப்பட்டனர்.

திருஅவையால் புனிதர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள், மற்றும் புனிதர் என்று அறிவிக்கப்படாமலேயே மக்களால் புனிதர்கள் என்று கருதப்படுவோர் அனைவரும், தங்கள் வாழ்வுப் பாதையில், முக்கியமான தருணங்களில் உன்னத முடிவுகளை எடுத்ததால், இன்று முடிவெடுக்கும் பாடங்களை நமக்குச் சொல்லித்தரும் வழிகாட்டிகளாக மாறியுள்ளனர்.

அனைத்தையும் அறிந்து, தெளிந்து தெரிவு செய்து, முடிவுகள் எடுக்கும் திறமை மனிதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ள தனித்துவமான திறமை. இத்திறமையை மையப்படுத்தி, தற்போது உலக ஆயர்கள் மாமன்றம், "இளையோர், நம்பிக்கை மற்றும் அழைத்தல் சார்ந்த தெளிந்து தேர்தல்" (Youg People, the Faith and Vocational Discernment) என்ற மையக்கருத்துடன் நடைபெற்று வருகிறது.

புனிதர்கள் அனைவரும் தாங்கள் எடுத்த முக்கியமான முடிவுகளில் இறைவனின் துணையைக் கட்டாயம் நாடியிருப்பர் என்பது உறுதி, அவர்கள் வாழ்வைப் புரட்டிப்போடும் வண்ணம் இயேசு சவால்களை முன்வைத்தபோது, அவர்கள் தயங்காமல் அவற்றை ஏற்றதால், இன்று புனிதர்களாக நம்முன் உயர்ந்து நிற்கின்றனர், வாழ்வை முற்றிலும் புரட்டிப்போடும் முடிவுகளை, புனிதர்கள் எடுத்தனர் என்பதற்கு, புனிதராக உயர்த்தப்பட்ட பேராயர் ரொமேரோ அவர்கள், ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

இறையரசின் நீதியை நிலைநாட்ட, பேராயர் ரொமேரோ அவர்கள் எடுத்த தீர்க்கமான முடிவு, அவரை மறைசாட்சிய மரணம் வரை அழைத்துச் சென்றது.

அதே போல் புனிதர்களாக உயர்த்தப்படும் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் எடுத்த முக்கியமான முடிவுகள் அவர்களை உன்னத நிலைக்கு உயர்த்தின. நுன்சியோ சுல்ப்ரீசியோ (Nunzio Sulprizio) என்ற 19 வயது நிறைந்த இளையவர், இளையோரை மையப்படுத்தி வத்திக்கானில் நடைபெற்ற உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஒரு முக்கிய நிகழ்வான புனிதர் பட்ட விழாவில் 19 வயது இளையவர் புனிதரானது இளையோருக்கு ஓர் உந்துசக்தியாக அமையும் என்று நம்புகிறோம்.

இயேசு தன்னைச் சந்திக்க வந்த இளையவரை அன்பொழுகப் பார்த்ததுபோல், இன்றைய இளையோரை அன்பொழுகக் காணவேண்டும் என்றும், புனிதத்தில் வாழ, இயேசு விடுக்கும் சவால்கள் நிறைந்த அழைப்பை ஏற்கும் துணிவை, இளையோர் பெறவேண்டும் என்றும் சிறப்பாக வேண்டிக்கொள்வோம்.




With Best Compliments from

# JAMES STREET MEDICAL CENTRE

## BULK BILING

**Mr. Stephen Sellathurai** CPA.,

**Dr. Anne Sellathurai** M.B.B.S., F.R.A.C.G.P.

11/63 James Street Dandenong VIC 3175 Ph : 03 9793 1962 / Fax : 03 9793 1924

jsmc_anne@hotmail.com




## திருத்தந்தையிடம் இருந்து இளையோருக்கும் முதியோருக்கும் இடையே உடன்படிக்கை

இன்றைய சமுதாயம் தாத்தா, பாட்டி ஆகியோரின் குரல்கள் அடக்கிவிட்டது என்றும், அவர்களது அனுபவம், ஞானம் ஆகியவற்றிற்கு தகுந்த இடம் வழங்கப்படவில்லை என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு புதிய நூலுக்கு எழுதிய அணிந்துரையில் கூறியுள்ளார்.

அக்டோபர் 23, வெளியிடப்பட்ட காலத்தின் ஞானத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் என்ற நூலுக்கு, திருத்தந்தை வழங்கியுள்ள இந்த அணிந்துரையைக் குறித்து, வத்திக்கான் நாளிதழ் L ' Osservate Romano, "ஒரு புதிய அரவணைப்பு – இளையோருக்கும் முதியோருக்கும் இடையே உடன்படிக்கை' என்ற தலைப்பில் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இவ்வுலகில் பெருகிவரும் தூக்கியெறியும் கலாச்சாரத்திற்கு ஒரு நேர்மறையான மாற்றாக, முதியோரை தூக்கியெறிந்துவிடாமல் போற்றி வளர்ப்பது, இளையோரின் கடமை என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் அணிந்துரையில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

முதியோரை ஒதுக்கிவைப்பது, இளையோரின் தவறு என்று கூறும் திருத்தந்தை, மனக்கசப்பில், முதியோர் பலர், இளையோரை புரிந்து கொள்ளாமல் கண்டனம் செய்வதும் தவறு என்று கூறியுள்ளார்.

முதியோரின் அனுபவம் மற்றும் ஞானம் ஆகியவை, இளையோரின் கனவுகள் மற்றும் ஆர்வம் ஆகியவற்றுடன் இணையும்போது, நல்லதொரு உலகம் உருவாகும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்நூலின் அணிந்துரையில் வலியுறுத்தியுள்ளார்.அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## நம்பிக்கை நாயகர்கள், இளையோர்

தங்கள் கனவுகளை நிறைவேற்ற விரும்பும் இளையோர், எதற்கும் அஞ்சாமல், தங்கள் கடமைகளை கையிலெடுத்து, நம்பிக்கையின் நாயகர்களாகத் திகழவேண்டும். திருத்தந்தை.

நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும், தங்கள் கையில் வைத்திருக்கும் இன்றைய இளையோர், நம்பிக்கையின் முக்கிய கதாபாத்திரமாக உள்ளனர். நிகழ்காலமும், வருங்காலமும், நம்பிக்கையுமாக இருக்கும் இளையோரே, எதற்கும் அஞ்சாமல், கடமைகளை மேற்கொண்டு, உங்கள் கனவுகளை நிறைவேற்றுங்கள் என்று இளையோருக்கு கூற விழைவதாக திருத்தந்தை கூறியுள்ளார்.

மக்களின் வாழ்வுக்கு ஆணிவேராக இருக்கும் முதியோரின் அனுபவங்களிலிருந்து பலன்பெறும்பொருட்டு, முதியோருடன் உரையாடுங்கள் என இளையோரிடம் விண்ணப்பித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆழமாக வேரூன்றியவர்களாக, மக்களின் வரலாற்றில் இணைந்தவர்களாக, உறுதியான உள்ளத்துடன், உரையாடல்களை மேற்கொள்ளுங்கள் எனவும், உங்கள் முன்னேற்றத்தின் வேராக உங்கள் வரலாறு உள்ளது என்பதை உணர்ந்தவர்களாக இச்சமூகத்தை முன்னோக்கி அழைத்துச் செல்லுங்கள் எனவும் இளையோரை ஊக்கப்படுத்தியுள்ளார்.

## உறுதிப்பூசுதல் அருளடையாளத்தின் நல்விளைவுகள்

உறுதிப்பூசுதல் எனும் இந்த அருளடையாளத்தில் பெறப்படும் தூய ஆவி எனும் கொடை, திருஅவை எனும் சமூகத்திற்குள் நம்மையும், பிறருக்காக வழங்கும் கொடையாக மாற்றுகிறது. கிறிஸ்துவின் மறையுடலின் உயிருள்ள அங்கத்தினர்களாகிய நாம், அகில உலகத் திருஅவையிலும், நம்மைச் சுற்றியிருக்கும் கிறிஸ்தவ சமூகத்திலும், திருஅவையின் வாழ்வு மற்றும் பணிகளில் பங்கெடுக்குமாறு அழைப்புப் பெற்றுள்ளோம். இத்தகைய திருஅவை பரிமாணத்தில் ஓங்கி ஒலிக்கும் அடையாளமான, உறுதிப்பூசுதல் அருளடையாளம், பொதுவாக. மறைமாவட்ட ஆயராலேயே வழங்கப்படுகிறது. தூய ஆவியாரின் கொடைகளின் வளம்நிறை பன்மைத் தன்மைகளின் வழியாக, திருஅவையின் ஒன்றிப்பு வாழ்வை வளர்க்க உதவ வேண்டும் என்ற கடமையைக் கொணடுள்ளார், அப்போஸ்தலர்களின் வழித்தோன்றலாகிய ஆயர்.

புதிதாக உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெறுபவரும், ஆயரும், தங்களுக்கிடையே பரிமாறிக்கொள்ளும், சமாதான அடையாளம், சமூகத்தை விசுவாசத்திலும், அன்பிலும் கிறிஸ்தவச் சேவையிலும் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை நினைவுறுத்தி நிற்கிறது. இந்த அருளடையாளத்தைப் பெற்றுள்ள நாம் ஒவ்வொருவரும், தூய ஆவியாரின் விடுதலை அளிக்கும் மூச்சுக் காற்றுக்கு, ஒவ்வொரு நாளும் நம் இதயங்களைத் திறந்தவர்களாக செயல்படுவோமாக, நாம் வாழும் இந்த உலகிற்கும், அகில திருஅவைக்கும், நம் ஒவ்வொருவருக்கும், பலன் தருவதற்காக நம்மால் பெறப்பட்டுள்ள கொடைகளை தூய ஆவியின் மூச்சுக் காற்றின் உதவியுடன் கொளுந்து விட்டு எரியச் செய்வோமாக என்று தன் ஆசீரை அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.

# சிறு வயது ரயில் பயணம் .....

சிறு வயது ரயில் பயணத்தின்
மிச்சங்கள், நினைவு பாதையில்
தடதடத்தே போகிறது...
நாளை பயணம் எனும் போதே
இரவு உறக்கம் ஓடி
ஒளிந்தே கொண்டது...
இரயிலில் போக போட்ட
சொக்காயும்...
தலைமுடி கலையாமல் இருந்திட
போட்டு விட்ட இரட்டை சடையும்
பாந்தமாகவே இருந்தது...
விடியற்காலை புறப்பாடு
நெஞ்சை படபடக்கவே
செய்தது...
பிரம்மாண்டமாய் இஞ்சின் பெட்டி
கண்டபோது பிரமிப்பாயும்,
பயணிக்கும் இருக்கை கண்ட
போது குதுகலித்தும் போனதே
இந்த பிஞ்சு மனசு....
ஏறியவுடன் வசவுகள்
வாங்கியப்படி மேல்
இருக்கைக்கு தாவிய பொழுது,
ஓங்காரமாய் ஒலித்த ரயில்
சத்தம் ஒய்யாரமாகவே
இருந்தது...
நளினமாய் வண்டி நகர்ந்த
போது கீழ் இருக்கைக்கு
சறுக்கியதும்
ஜன்னலோர கம்பி பிடித்தே
கடந்ததை கண்டது
பேரானந்தமாகவே தோன்றியது...
அன்றாடம் சாப்பிடும் இட்லி,
அமிர்தமாய் ருசித்தது,
சீட்டில் சம்மணமிட்டே சாப்பிட்ட
போது...
தின்று முடித்த அரை மணியில்,
கடந்து போன அவித்த
கடலையும்,
பஜ்ஜியும், பாங்கான முறுக்கும்
பசியை ஏனோ பயங்கரமாய்
தூண்டியே விட்டது...
இஞ்சி மொரப்பா இனித்தே
போனது...
ஆசைப்பட்ட பண்டம் வாங்கி
தந்த அம்மா, அப்பா
ஆண்டவனாய் தெரிந்தது
ஏன் தானோ
காத்திருந்த இரவுக்கு வீணாய்,
காற்றுப்பட்டவுடன் கண்கள்
சொக்கியே போனது...
இருளானவுடன் எரிந்த விளக்கு
ஏகாந்தமாய் இருந்தது.
கை தொட்டு பார்த்த போது
சாதனையாய் தெரிந்தது...
இரயிலடியில் காத்து நின்ற
சொந்தங்கள் கண்ட போது
பயணம் சுகமே ஆனது...
இன்று நிறையவே
வழிப்பயணம்...
சின்ன வயசு பயணம் மட்டும்
மனசுக்குள்ளே ஏனோ
சில்லுன்னே இனிக்கிறது...
சிறப்பாக தெரிகிறது....

......சுகன்யா.....



# இசை

அடர் இருட்டின் அடர்த்தியில்,
பளிச்சிடும் வெயிலின் வெப்பத்தில்,
உறைய வைக்கும் குளிர்ச்சியில்,
காதல் மிகுந்த மொழிகளில்,
கண்ணீர் நிறைந்த கதைகளில்,
நுரைக்கும் கடல் அலைகளில்,
எல்லையில் காண்கின்ற நீல வானமதில்,
அன்னையின் விலையில்லா அன்பினில்,
தந்தையின் எல்லையில்லா தியாகமதில்,
உடன்பிறப்பின் தோள் அணைப்பில்,
உற்ற நட்பின் உறவினில்,
மனம் ரௌத்திரமான நொடிகளில்,
நிற்சலனமாய் அமைதி கொண்ட வேளைகளில்,
காதலில் கரைந்து நின்ற தருணங்களில்,
மனம் லயித்த பிரார்த்தனைகளில்
ஜன்னலோர பிரயாணங்களில்,
சில, பல தருணங்களில்,
மனதில் மத்தாப்புக்கள் பூத்திட்ட
நொடி பொழுதெல்லாம்,
தூரமாய், பின் வெகு அன்னியமாய்,
இசையின் ஸ்வரங்கள் ரீங்காரமாய்
ஜாலங்கள் செய்தே போனது.
இசை
காண்கின்ற, உணர்கின்ற அனைத்தையும்
உன்மத்தமாய் காதலிக்க செய்தது.

.....சுகன்யா.......






# TRADEMARK LOGISTICS INTERNATIONAL PTY LTD

Total Logistics Solutions

## Air Freight • Sea Freight

**Customs Clearance • Quarantine Clearance**

**Storage • Warehousing • Distribution**

**Cartage • Insurance**

**Project Management**

**Personnal Effects**




**1st Floor 75 Fulton Drive, Derrimut Vic 3030.**

Please Contact Michael on Mob: 0433 672 833

Ph: 9338 6277 Fax: 8360 7212

E:Info@trademarklogistics.com.au

**www.Trademarklogistics.com.au**

flydubai

FNC FREIGHT NETWORK CORPORATION

FM FREIGHTMIDPOINT

## SPECIAL ORDERS

ORDERS ARE TAKEN FOR
HOME OR OCCASION.
PREPARED AS PER
YOUR CHOICE OF MEALS



## THALLI

EXPERIENCE
OUR FRIDAY SPECIAL



## ODIYAL KOOL

PREPARED IN
AUTHENTIC
JAFFNA STYLE



# Spicy King

21 SUN CRES, SUNSHINE VIC 3020 | (03) 9078 2923

# நமக்கொரு பாலகன் பிறந்தார்....



அன்பெனும் உணர்விலே அகிலமே
திளைத்திட ஆதவன் தோன்றிவிட்டான்! -
எங்கள் ஆண்டவன் தோன்றிவிட்டான்!
எங்கள் துன்பங்கள் தாங்கிட துயரங்கள்
நீங்கிட தூதுவன் தோன்றிவிட்டான்! -
இறைத் தூதுவன் தோன்றிவிட்டான்!
மாட்டுக் குடியிலே மரியன்னை மடியிலே
மனிதனாய்ப் பிறந்துவிட்டான்! - இயேசு
புனிதனாய் பிறந்துவிட்டான்!
விண்மீன்கள் வாழ்த்திட விண்ணிலே இரவிலே விண்மீனாய் பிறந்துவிட்டான்! -
இயேசு மெசியாவே பிறந்துவிட்டான்!
தச்சனின் மகனாகத் தத்துவ ஞானியாய் தெய்வமாய்ப் பிறந்துவிட்டான்! - அவன்
பச்சிளங் குழந்தையாய்ப் பாவங்கள் நீக்கிட பாரினில் பிறந்துவிட்டான்!
அன்பால் கருணையாய் அகிலத்தை மாற்றியே ஆண்டவனாய்த் தோன்றினானே!
அவன் முன்பாக மன்றாடி முகந்தாழ்த்தி வணங்குவோம்.
மெசியாவே மன்னிப்பாயே! - இயேசு மெசியாவே மன்னிப்பாயே!!

---

*We Shall gather as Tamil Speaking Catholics for Christmas Celebration and enjoy the events & dinner after the mass*
*Everything will be finished by 8.00 pm.,*

*Venue :* **St. Jude's Church,** **George Street, Scoresby**

*Date : 09.12.2018* *Mass Time : 3.30 pm.,*

*followed by Programs and Dinner*

---

*And also would like to inform you the details of our usual New Year Midnight Thanksgiving Mass as follows*

*Date : 31.12.2018* *Time : 11.15 pm.,*

*Location :* **St. Paschal's Seminary**
**100, Albion Road, Box Hill, Vic 3128.**